**தேதி:- 29.01.2020 அசல் வழக்கு எண்.101/2017 வா.சா.1 (ரவி)**

**குறுக்கு விசாரணை :- (4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)**

சொத்துக்கள் ஆதியில் என் பாட்டனார் கிருஷ்ணசாமிக்கு பாத்தியப்பட்டது. அவர் இறந்த பிறகு அவரது மகன்களான என் தகப்பானருக்கும், அவரது உடன்பிறந்த சகோதரர்களுக்கும் சொத்துக்கள் பாத்தியப்பட்டது. மேற்படி கிருஷ்ணசாமி உயில் எழுதி வைத்தார் என்று தெரியும். என் பாட்டனாரின் மகன்களின் ஆண் வாரிசுகளுக்கு சொத்து சேரவேண்டுமென்று உயில் எழுதி வைத்தார். என்னிடம் காட்டப்படும் உயில் 28.02.1954 ல் என் பாட்டனார் எழுதி வைத்த உயில் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.1**. இந்த ஆவணம் 1 முதல் 3 மற்றும் 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்பட்டது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.